மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியத் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2013), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2013)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 15-4-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2013 மே 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்து சொல்ல விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் கருத்துகளைச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், முன்மொழியப் பெற்ற இந்நாள் பல்கலைக்கழக வரலாற்றிலே ஒரு பொன்னாள் என்று குறிப்பிட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை கொண்டுவந்திருப்பதன்மூலம் ஒரு புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மேற்கொண்டிருக்கிற இந்த உறுதியான நடவடிக்கையை, எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்டம் வர வேண்டும் என்று பல ஆண்டுகளாக பேராசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பொது மக்கள் போராடியிருக்கிறார்கள், சட்டமன்றத்திலே நானும் வற்புறுத்தி இருக்கிறேன். இந்த வேண்டுகோளையெல்லாம் ஏற்று, இன்றைக்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்மொழியச் செய்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அவையின் சார்பிலே நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, இதன்மூலம், தனியார் நடத்துகிற கல்வி நிறுவனங்களுக்கு இதுவோர் எச்சரிக்கையாக அமையும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இதை ஒருமனதாக நிறைவேற்றுகிற அதே நேரத்தில், இந்தச் சட்டத்திலுடைய 4-வது அத்தியாயத்தில், பிரிவு 16-ல் பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் என்கிற பிரிவு சொல்கிறது. இந்தச் சட்டத்தை, இப்போது ஒருமனதாக நிறைவேற்றினாலும், இதிலே ஆட்சிக் குழு என்பது மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கமாக, பல்கலைக்கழகங்களிலே ஆளவை மன்றம், Senate, என்பது இருக்கும். பல்வேறு தரப்பினரையும், ஆசிரியர்கள், ஊழியர்கள், மற்றவர்களையெல்லாம் கொண்டிருக்கிற Senate அமைப்பு என்பது இருக்கும். அது, இந்தச் சட்டத்திலே இடம் பெறவில்லை. இப்போது நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும், பிறகாவது அனைவருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கிற இந்த Senate-ஐ உருவாக்குவது பற்றி இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை

நிறைவேற்றுவதன்மூலம் ஒரு புதிய வரலாறு படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றிகளையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடந்த பல ஆண்டுகளாக கல்வியைப் பகிரங்கமாக, வியாபாரமாக மாற்றி, தகுதியற்றவர்களையெல்லாம் பணியிலும், படிப்பிலும் பயன்படுத்தி தமிழகத்தினுடைய கல்வி வரலாற்றில் ஒரு களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த சூழ்நிலை இருந்து வந்துள்ளது. அங்கே பணியாற்றக்கூடிய ஆயிரக்கணக்கான பணியாளர்களும், மாணவர்களும் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய சீரழிவை எடுத்துச் சொல்லி, பல போராட்டங்களை, பல ஆட்சிக் காலத்தில் நடத்தினாலும்...

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. குணசேகரன்: அந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய போக்கினை மாற்றிக்கொள்ளாத நிலை இருந்தது. சமீபத்தில் அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர், பணியாளர்கள் எல்லாம் தொடர்ந்து போராடியதன் விளைவாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் அந்தப் பல்கலைக்கழகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் தமிழ்நாடு சட்டமன்றத்திலே இதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, இன்றைக்கு அரசே இந்தப் பல்கலைக்கழகத்தை ஏற்று நடத்தியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். இன்றைக்கு தனியார் பல்கலைக்கழகங்களுக்கு ஓர் எச்சரிக்கையாக, பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல, பள்ளிக் கல்வித் துறையிலும் தனியாருடைய ஈடுபாடு இருக்கிற நேரத்தில், அதை நெறிமுறைப்படுத்துவதற்கான ஒரு முதல் மைல் கல்லாக உள்ள இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[2013 மே 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனமானாலும், தனியார் நிறுவனமானாலும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதுதான் அதனுடைய அடிப்படை அம்சம். எந்த நிறுவனமும் அடிப்படை இலட்சியத்திலிருந்து மாறுபடுகின்றபொழுது அரசு தலையிடுவதற்கு எல்லாவிதமான உரிமைகளும் உண்டு. ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்பு இராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்மைக் காலத்திலே பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியதன் விளைவாக இன்று இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசே எடுத்துக்கொள்கின்ற ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.*

ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்பு இந்தப் பல்கலைக்கழகத்திற்கு 20 இலட்சம் ரூபாயையும் 300 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களையும் இந்தக் குடும்பம் கொடுத்திருக்கின்றது. என்றாலும்கூட அந்த நிறுவனம் இப்பொழுது பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியதன் விளைவாக அதை அரசே எடுக்க முன் வந்திருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், ஒரு தமிழ் உணர்வோடு ஒரு தமிழனால் தொடங்கப்பட்டது இந்தப் பல்கலைக்கழகம். எல்லாவிதமான அதிகாரங்களையும் இப்போதே தமிழ்நாடு அரசு மேற்கொள்வதற்குண்டான வாய்ப்புகள் இதில் இருக்கின்றன. இருந்தாலும்கூட அந்தப் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் என்ற அடிப்படையிலே, Pro-Chancellor என்ற ஒரு சில பதவிகளையாவது அவர்களுக்கு வழங்குவதுதான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, இதை நிறைவேற்றுவதற்கு முன்பாக செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது சிறந்தது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால், அது தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம். அந்த அந்தஸ்தை, அந்த வாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலே அதில் குறைபாடுகள் இருந்தாலும்கூட அதைக் களைந்து, அதை மீண்டும் அவர்களே செயல்படுத்துவதற்கான வாய்ப்பை தரவேண்டும். ஏனென்று சொன்னால், இப்பொழுது அந்தப் பல்கலைக்கழகத்திலே 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 30

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 45 கோடி ரூபாய் அளவுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். அரசு எடுத்துக் கொள்கின்றபொழுது அரசுக்கு மிகச் சுமைகூட வந்துவிடலாம். அவர்கள் தவறிழைத்தார்கள், அதனால் அவர்களை வைத்தே சரி செய்வது சரியாக இருக்கும். இச்சட்ட முன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்ற எனது கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்பது 1929 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம் யுனிட்டரி என்று சொல்லப்படுகிற தன்மையில் ஒரே இடத்தில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாகும். இப்பல்கலைக்கழகத்தில் 10 புலங்களை, அதாவது கலை, அறிவியல், கல்வியியல், இசை, மொழியியல், பொறியியல், மருத்துவம், விவசாயம் மற்றும் உடல்சார் அறிவு என்று பல அறிவு சார்ந்த படிப்புகளை இயக்குகிறது.

தொலைதூரக் கல்வி இயக்கத்தைப் பொறுத்தவரையில், ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாகும். இது 84 ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சி பெற்று நாட்டின் வளர்ச்சியில் முழு பங்கு வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் தமிழகத்திலே இருக்கக்கூடிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பேராசிரியப் பெருமக்கள், அலுவலர் பெருமக்கள், மாணவர்கள் எல்லாம் அரசே இந்தப் பல்கலைக்கழகத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்திற்கு சில நேரங்களில் நிதியும் வழங்கியிருக்கிறது. எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பு அம்சமாக இந்தப் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 2-05

1998-1999 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை தொகுப்பு நிதி மற்றும் இதர மானியமாக மொத்தம் 427 கோடியே 98 இலட்சம் ரூபாயும் 1998-1999 ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை நல்கை நிதியாக 54 கோடியே 44 இலட்சம் ரூபாயும் 1998-1999 ஆம் ஆண்டு முதல் 2011-2012 வரை வழங்கப்பட்ட நிதி கூடுதல் மானியமாக 372 கோடியே 96 இலட்சம் ரூபாயும், Special Grant ஆக 74 கோடியே 50 இலட்சம் ரூபாயும், நம்முடைய அரசு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கி வந்திருக்கிறது. 1-1-1996 முதல் அன்றைய நிலவரப்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி, தொலைதூரக் கல்வி மற்றும் மருத்துவப் பாடப் பிரிவில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் 3,046 பேர் பணியாற்றினார்கள். இன்றைக்கு 31-10-2012 வரை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியிடங்களில் 12,359 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிதி நெருக்கடி ஏற்பட்டு, மாணவர்கள் பாதிக்கப்பட்டு, ஆசிரியர்கள் போராடி, உண்ணாவிரதம் இருந்து, பல போராட்டங்கள் செய்து அதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அரசு இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலுங்கூட, அங்கே அவர்கள் அதை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், இன்றைக்கு அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்கின்ற வகையிலும், மாணவர்கள் கல்வியைப் பாதுகாக்கின்ற வகையிலும் அவர்களுக்கு ஓர் உத்தரவாதம் வழங்குகின்ற வகையிலேதான் தாயுள்ளத்தோடு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இது வரவேற்கக்கூடிய ஒரு திட்டம். இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு ஒரு சாதனையை மாண்புமிகு முதல்வர் அம்மா நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, பல்கலைக்கழக வளாகத்தில் 36,854 மாணவர்களும், தொலைதூரக் கல்வியில் 3 இலட்சத்து 33,092 மாணவர்களும் ஆக, மொத்தம் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 146 மாணவர்களும் பயின்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலபாரதி அவர்கள், அங்கே, ஆட்சி மன்றக் குழு இருக்கிறது, அதேபோல செனட் இல்லையென்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். செனட்டைப் பொறுத்தவரையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சட்டமியற்றுகிறபோது ஆட்சிமன்றக் குழு, பாடத் திட்டக் குழு, கல்விக் குழு அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்விக் குழுவானது என்னென்ன பாடத் திட்டங்களை வகுத்துக்கொடுக்குமோ, அதை ஆட்சி மன்றக் குழு நிறைவேற்றி அந்தப் பல்கலைக்கழகத்தின் தேவையான வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளும்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்கள். அப்படித் தோற்றுவிக்கிறபோது அங்கே செனட் இல்லாமல் கல்விக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் கல்விக் குழு மூலமாக 2003-லிருந்து புதிதாக உருவாக்கப்படுகிற அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கல்விக் குழு மூலமாக அங்கே தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சிறப்பான இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றவிருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் இதைப் பாராட்டி வருகின்ற இந்த வேளையில் சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2013 மே 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 56 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 56 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

(ச) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2013), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

@**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2013)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 30–4–2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.